www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

| | | |
|---|---|---|
| இந்து நாகரிகம் I<br>Hindu Culture I | Two hours<br>Gr -13 (2023) | 46 T I |

### பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்குமுரிய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. பழந்தமிழ் இலக்கியங்களில் சால்பு என்ற பதம் சுட்டுவது.
   1) நாகரிகம் 2) பண்பாடு 3) கலாசாரம் 4) நவீனம் 5) ஒழுக்கம்

02. உலக விடுதலைக்கான வேண்டுதலுக்காக நாளாந்தம் ஆலயங்களிலே பாடப்படும் பாடல்.
   1) மண்ணில் நல்ல வண்ணம் 2) உலகெலாம் உணர்ந்து 3) வான்முகில் வழாது பெய்க
   4) ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே 5) உலகத்து நாயகியே

03. சிந்து வெளி அகழ்வுக்குத் தலைமை தாங்கிய புதை பொருளாய்வாளர்.
   1) அலெக்ஸ்சாண்டர் 2) கன்னிங்காம் 3) வில்லியம் ஜோன்ஸ்
   4) சேர் ஜோன் மார்ஷல் 5) இராச மாணிக்கனார்

04. தற்கால சக்தி வழிபாட்டுடன் தொடர்புடையதாக சிந்துவெளி மக்களிடையே நிலவிய வழிபாடு.
   1) தரைப்பெண் வழிபாடு 2) லிங்க வழிபாடு 3) நாக வழிபாடு
   4) யோக வழிபாடு 5) சூரிய வழிபாடு

05. செய்யுள் நடையிலும் உரை நடையிலும் அமைந்த மந்திரங்களைக் கொண்ட வேதம்
   1) இருக்கு வேதம் 2) யசுர் வேதம் 3) சாம வேதம்
   4) அதர்வண வேதம் 5) ஆயுள் வேதம்

06. பெண்கள் சுபீட்சம், நன்மை தீமை கருதிச் செய்யப்படுபவை குறிப்பது.
   1) பௌஷ்டி காணி 2) ராஜகர்மாணி 3) ஸ்திரீகர் மாணி
   4) பேஷயாணி 5) கர்மாணி

07. நால்வகை வருணக் கட்டமைப்பின் தொடக்கத்தை இருக்கு வேதத்தின் எந்தப் பகுதியில் காணலாம்.
   1) நாஸதீய சூக்தம் 2) புருஷ சூக்தம் 3) யம சூக்தம்
   4) வருண சூக்தம் 5) பிரமச்சரிய சூக்தம்

08. இந்து சமய கலைக்களஞ்சியம் எனக் குறிப்பிடுவது.
   1) இதிகாசங்கள் 2) புராணங்கள் 3) ஆகமங்கள்
   4) வேதங்கள் 5) பகவத்கீதை



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

09. உலகியல் சார்பும் தெய்வீக நம்பிக்கையும் கலந்த இலக்கியமாகக் கருதப்படும் இலக்கியம்.
1) இராமாயணம் 2) மகாபாரதம் 3) பகவத் கீதை
4) பெரிய புராணம் 5) சிவரகசியம்

10. மகா புராணங்களில் விஷ்ணு புராணங்களின் எண்ணிக்கை
1) 10 2) 18 3) 4 4) 02 5) 01

11. புராணங்கள் தத்துவ உண்மைகளைப் பாமர மக்களுக்கு கதை வடிவில் எடுத்துக் கூறுவன. அந்த வகையில் ஆணவத்தை அழித்தலைக் குறிக்கும் புராணம்.
1) கருட புராணம் 2) ஸ்கந்த புராணம் 3) மார்க்கண்டேய புராணம்
4) பாகவத புராணம் 5) தல புராணம்

12. சக மார்க்கத்தில் நின்று முத்தியடைந்த நாயனார்.
1) சம்பந்தர் 2) நாவுக்கரசர் 3) சுந்தரர்
4) மணிக்கவாசகர் 5) சிறுத்தொண்டர்

13. அங்கோவாட் சிவாலயத்தைக் கட்டிய மன்னன்
1) இராஜராஜ சோழன் 2) ராஜசிம்மன் 3) நந்திவரமன்
4) சூரிய வர்மன் 5) மாமல்லன்

14. உலகத்திலே மிக உயரமான தங்கத்தினாலான முருகன் சிலை எங்கே உள்ளது?
1) மலேசியா 2) கம்போடியா 3) தாய்லாந்து
4) யாவா 5) பர்மா

15. வழிபாட்டம்சங்களில் வெறியாட்டு, நடுகல் வழிபாடு, பாவை நோன்பு என்பன இடம்பெற்ற காலப்பகுதி
1) பல்லவர் காலம் 2) சோழர் காலம் 3) அறநெறிக் காலம்
4) சங்க காலம் 5) நாயக்கர் காலம்

16. விசித்திர சித்தன் வியத்தகுதிறத்தோன் என்னும் விருதுப் பெயர்களைக் கொண்ட மன்னன் யார்?
1) சிம்ம விஷ்ணு 2) நரசிம்மன் 3) மகேந்திர வர்மன்
4) இராஜசிம்மன் 5) நந்தி வர்மன்

17. தமிழகத்தின் பெரிய கட்டுமானக் கோயில் என்ற பெருமையைப் பெறுகின்ற பெரிய திருக்கற்றளி என்னும் ஆலயம்
1) தஞ்சைப் பெருங்கோயில் 2) சிதம்பரம்
3) காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயில் 4) திருச்செந்தூர்
5) காஞ்சி கைலாச நாதர் கோயில்

18. அன்பை விளக்காகவும் ஆர்வத்தை நெய்யாகவும் கொண்டு ஆன்ம ஒளிவிளக்கேற்றி வழிபாடு செய்தவர்கள்.
1) ஆழ்வார்கள் 2) நாயன்மார்கள்
3) அகச்சந்தான குரவர்கள் 4) புறச்சந்தான குரவர்கள்
5) சித்தர்கள்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

19. ஐப்பசி சதய நட்சத்திரத்தில் பிறந்த நாள் பெரு விழா கொண்டாடிய அரசன்.
    1) இராஜராஜசோழன் 2) திருநீற்றுச் சோழன் 3) அநபாயச் சோழன்
    4)மகேந்திரவர்மன் 5) விஜயாலயச் சோழன்

20. அளவைக் கருவிகளில் நடராஜர் சின்னத்தைப் பொறித்த அரசர்கள்
    1) பல்லவ மன்னர்கள் 2) பாண்டிய மன்னர்கள் 3) சோழ மன்னர்கள்
    4) நாயக்க மன்னர்கள் 5) விஜய நகர மன்னர்கள்

21. "விஷ்ணு சிந்தீயம்" என்னும் நூலை எழுதியவர்
    1) கிருஷ்ண தேவராஜர் 2) சங்கரர் 3) இராமானுஜர்
    4) மத்துவர் 5) வேதவியாசர்

22. பல்லவர் கால பக்தி இயக்கத்தில் பங்கெடுத்த ஆண்டாளின் பணிகளுக்கு ஒப்பான வட நாட்டு பெண் பக்தி நெறியாளர்
    1) நாச்சியார் 2) மங்கையற்கரசியார் 3) இசைஞானியார்
    4) மீராபாய் 5) ஔவையார்

23. "இந்தியாவின் புதுயுகத் தந்தை" என போற்றப்படுபவர்
    1) ராஜராம் மோகன்ராய் 2) தயானந்த சரஸ்வதி 3) சுவாமி விவேகானந்தர்
    4) சுவாமி இராம கிருஷ்ணர் 5) இராமலிங்க அடிகளார்

24. பஞ்ச பூத தலங்களில் ஆகாயத்தின் அம்சமாக சிவபெருமானை வழிபடும் தலம்
    1) திருவையாறு 2) திருவண்ணாமலை 3) சிதம்பரம்
    4) திருவானைக்கா 5) திருக்காளத்தி

25. பண்பாடு என்பது பழந்தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு சுட்டப்படுகின்றது.
    1) ஒழுக்கம் 2) சால்பு 3) அறிவு
    4) சட்டம் 5) நம்பிக்கை

26. "சூறாவளித் துறவி" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர்.
    1) இராமகிருஷ்ணர் 2) இராஜாராம் மோகன்ராய் 3) துளசி தாசர்
    4) தயானந்த சரஸ்வதி 5) சுவாமி விவேகானந்தர்

27. பொலன்னறுவைப் பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்ட சிவன் கோயில்களின் எண்ணிக்கை
    1) 10 2) 05 3) 16 4) 07 5) 12

28. சுவாமி விபுலானந்தரக்கு "பிரபோதசைதன்யர்" என்னும் பிரமச்சரிய நாமத்தைச் சூட்டியவர்.
    1) சுவாமி சிவானந்தர் 2) நாவலர் 3) அருணாசலதேசிகர்
    4) காசிவாசி செந்தி நாதையர் 5) சேர் பொன் இராமநாதன்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

29. சைவ மாணவர்கள் கற்பதற்கு இலகு தமிழிலும் சமய நோக்கிலும் 12க்கு மேற்பட்ட நூல்களை எழுதி அவற்றின் தொகுப்பு "சைவசமயக் களஞ்சியம்" என பெயர் சூட்டப்பட்டுள்ளது. அந்த தொகுப்பின் ஆசிரியர்.

1) நாவலர் 2) காசிவாசி செந்திநாதையர் 3) சுவாமி விபுலானந்தர்
4) அருணாசல தேசிகர் 5) கைலாசநாதக் குருக்கள்

30. மங்களாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டவர்கள்.

1) நாயன்மார்கள் 2) ஆழ்வார்கள் 3) மன்னர்கள்
4) சித்தர்கள் 5) தேவரடியார்கள்

31. இடத்துக்கிடம் நகர்த்தக் கூடியதாக அமைக்கப்படும் விக்கிரகம்

1) சல விக்கிரகம் 2) அசல விக்கிரகம் 3) சலாசல விக்கிரகம்
4) எழுந்தருளி விக்கிரகம் 5) பஞ்சலோக விக்கிரகம்

32. சிவ மூர்த்தங்களின் எண்ணிக்கை

1) 25 2) 12 3) 101 4) 18 5) 64

33. சிவானந்த நடனம் என்னும் கலாதத்துவ நூலை எழுதியவர்.

1) கலாயோகி ஆனந்த குமார சுவாமி 2) சங்கரர்
3) கோபால கிருஷ்ண ஐயர் 4) பரத முனிவர்
5) சுப்பிரமணிய பாரதியார்

34. சிகரக் கோயில்கள் தோன்றிய காலம்

1) பல்லவர் காலம் 2) சோழர் காலம் 3) குப்தர் காலம்
4) நாயக்கர் காலம் 5) விஜய நகர் காலம்

35. பிரஸ்தான திரயங்களில் ஒன்றாகிய பிரம சூத்திரத்தின் ஆசிரியர்

1) கௌடபாதர் 2) பாதராஜணர் 3) வேதவியாசர்
4) மத்துவர் 5) சங்கரர்

36. ஸ்ரீ ரங்கத்து மடாதிபதி ஆளவந்தாரின் வேண்டுகோளை அறிந்து பாடியவர்.

1) சங்கரர் 2) இராமானுஜர் 3) மத்துவர்
4) பெரியாழ்வார் 5) இராமானந்தர்

37. பசு வதையை எதிர்த்து எமது நாட்டை விட்டு வெளியேறியவர்.

1) ஆறுமுகநாவலர் 2) சேர். பொன் அருணாசலம் 3) சுவாமி விபுலானந்தர்
4) சுவாமி ஞானப்பிரகாசர் 5) அருணாசல தேசிகர்

38. "சித்தாந்த அட்டகம்" என்னும் எட்டு சைவ சித்தாந்த நூல்களையும் இயற்றியவர்.

1) மெய்கண்ட தேவர் 2) மறைஞான சம்பந்தர் 3) உமாபதி சிவாச்சாரியார்
4) அருணந்தி சிவாச்சாரியார் 5) திருவியலூர் உய்ய வந்த தேவர்

39. "என்னைத் தீமையிலிருந்து நன்மைக்கு இட்டுச் செல்வாயாக" என்னும் வேண்டுதலைக் கொண்டுள்ள உபநிடதம்.

1) பிருகதாரணிய உபநிடதம் 2) கடோ உபநிடதம் 3) முண்டக உபநிடதம்
4) சுவேதாஸ்வர உபநிடதம் 5) கேனஉபதிடதம்



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

40. "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனக் கூறிய நாயனார்.

1) திருஞானசம்பந்தர்
2) சுந்தரர்
3) திருநாவுக்கரசர்
4) மாணிக்கவாசகர்
5) காரைக்காலம்மையார்

➢ **41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையின் I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>நடராஜர் | F<br>கிரியை நெறி | K<br>12 சூக்தம் | P<br>ஆகமப் பிரியன் |
| B<br>சைவ சித்தாந்த மார்க்கன் | G<br>குறிஞ்சி | L<br>சிவ சூடாமணி | Q<br>புறநானூறு |
| C<br>பாலாறுவாயர் | H<br>நந்திக்கொடி | M<br>காதலாகி கசிந்து | R<br>நான்கு இயல் |
| D<br>மெய்கண்டதேவர் | I<br>காஞ்சி கைலாச நாதர் | N<br>இராஜராஜ சோழன் | S<br>பூம்பாவையை உயிர்ப்பித்தமை |
| E<br>வெறியாட்டு | J<br>சிவஞான போதம் | O<br>நடுகல் வழிபாடு | T<br>தஞ்சைப் பெருங் கோயில் |

41. சோழர் ஆட்சியுடன் தொடர்புடைய தொகுதி.

1) A, H, N, T  2) C, F, K, Q  3) D, G, M, R  4) E, F, L, P  5) B, J, K, R

42. இராஜசிம்மன் சிறந்த சிவபக்தன் என்பதை எடுத்துக்காட்டுவது.

1) B, G, K, P  2) B, I, L, P  3) A, H, K, Q  4) C, I, M, S  5) E, F, O, Q

43. திருஞான சம்பந்தருடன் தொடர்புடைய தொகுதி.

1) D, G, L, S  2) E, F, K, Q  3) B, J, L, T  4) C, F, M, S  5) C, H, M, P

44. மெய்கண்ட சாஸ்திர நூல்களில் நடுநாயகமாக விளங்கும் நூலுடன் தொடர்புடைய தொகுதி.

1) D, H, K, P  2) C, I, L, R  3) D, J, K, R  4) B, F, L, Q  5) C, I, N, S

45. சங்க காலத்துடன் தொடர்புடைய தொகுதி.

1) A, G, L, P  2) E, G, O, Q  3) D, F, M, R  4) B, H, N, Q  5) D, I, L, S

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

➢ **46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

46. வேதவியாசரின் வடமொழி மகாபாரதம்
    1) மகாபாரதத்தில் இராஜதர்மம் உயர்நிலையில் போதிக்கப்பட்டுள்ளது.
    2) மகா விஷ்ணுவின் இராம அவதாரத்தோடு தொடர்புடையது.
    3) பதினெட்டுப் பருவங்களைக் கொண்டது.
    4) ஏறக்குறைய கி.மு. 6ம் நூற்றாண்டில் எழுந்தது.
    5) தமிழில் வில்லிபுத்தூரரால் இயற்றப்பட்டது.

47. வட மொழிப் புராணங்கள்
    1) பௌராணிகர்களால் தோற்றுவிக்கப்பட்டது.
    2) குப்தர் காலத்தில் தோற்றம் பெற்றது.
    3) சிவ புராணங்கள் 18 ஆகும்.
    4) தச லட்சணங்கள் பற்றி விளக்குகின்றது.
    5) தவம், விரதம், வேள்வி, மூர்த்தி, தீர்த்தம், பற்றியும் விளக்குகின்றது.

48. பிரம சமாஜத்தின் பணிகள்
    1) 1815 இல் ஆத்மீகசபை தாபித்தமை.
    2) உடன் கட்டை ஏறியதை சதி என்னும் சட்டம் மூலம் தடுத்தமை.
    3) விக்கிரக ஆராதனை என்ற நூலில் உருவ வழிபாட்டை ஆதரித்தமை.
    4) விதவைகள் மறுமணம், பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தமை.
    5) வேதாந்தக் கல்வியைப் பரப்பிமை.

49. கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம் ஆலயத்தின் சிறப்புக்கள்
    1) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளது.
    2) கல் நந்தி புல் உண்ட சிறப்புக்குரியது.
    3) தல விருட்சம் ஆல மரமாகும்.
    4) மட்டக்களப்பு மான்மியம் ஆலய வரலாறு பற்றி கூறுகின்றது.
    5) தேசத்துக் கோயில்களில் ஒன்று

50. இந்து சமயமும் தகவல் தொடர்பாடலும்
    1) மக்களுக்கு செய்திகளை வழங்கும் தொடர்புச் சாதனம்
    2) மனித வாழ்க்கைக்கு அவசியமானதாகும்.
    3) மனிதனை சமய நெறிக்கு இட்டுச் செல்கிறது.
    4) உலகத்துடன் ஒத்து இயங்க இன்றியமையாதது
    5) மனிதனை கிணற்றுத் தவளையாக வாழ வைப்பது.

(50 x 2 = 100 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

NFWC

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம் II<br>Hindu Culture II | Three Hours 10 min<br>Gr -13 (2023) | 46 | T | II |

### பகுதி – II

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

01. "இந்து நாகரிகத்தின் ஊற்றுக் கண்ணாக விளங்குவது சிந்து வெளி காலமாகும்" இக் கூற்றினை ஆதாரமாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

அ) சான்றாதாரங்கள்

ஆ) சிவ வழிபாட்டு முறைகள்

இ) நுண்கலைகள்

ஈ) வாழ்க்கை முறைகள்

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

agaram.lk

02. இந்து நாகரிகத்தை வளம்படுத்திய வகையில் புராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் விடயங்களில் ஆராய்க.

அ) பஞ்ச இலட்சணங்கள்

ஆ) புராணங்களின் வகைகள்

இ) வழிபாட்டு முறைகள்

ஈ) தத்துவ சிந்தனைகள்

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

03. "தென்னக வரலாற்றில் பல்லவர் காலம் பத்திநெறிகாலமாகும்" இக்கூற்றினை சான்றாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.

அ) மன்னர்களது பங்கும் பணியும்

ஆ) பக்தி இயக்கமும் அதன் செல்வாக்கும்

இ) திருக்கோயில்களின் வளர்ச்சி

ஈ) திருக் கோயில் வழிபாடு

(5+5+5+5 = 20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

04. இலங்கையின் இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்கு மேல்வரும் சமய நிறுவனங்கள் ஆற்றிய பணிகள் பற்றி விளக்குக.

அ) சைவபரிபாலன சபை

ஆ) இராம கிருஷ்ண மடம்

(10 + 10 = 20 புள்ளிகள்)

05. சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் ஆன்மா பற்றிய சிந்தனைகளை விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)

06. "ஈழத்து சைவ சமய வளர்ச்சியில் சைவப் பெரியார்காசிவாசிசெந்தில் நாதையர் ஆற்றிய பணிகள் அளப்பரியன" ஆராய்க. (20 புள்ளிகள்)

07. சோழப் பெரு மன்னர் காலத்தில் ஏற்பட்ட நுண்கலைகளின் வளர்ச்சி பற்றிய விளக்குக.

(20 புள்ளிகள்)

08. இராமானுஜர் வேதாந்தத்தின் சிறப்புக்களை மேல்வரும் விடயங்களில் பரிசீலிக்குக.

அ) பரம் பொருட் கொள்கை

ஆ) ஆன்மாவுக்கும் பரம் பொருளுக்கும் இடையிலான தொடர்பு

(10+10 = 20 புள்ளிகள்)

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk